அமைப்பின் மூலம் அமைக்கலாம் என்று ஆய்வு செய்து இப்போது அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(10.10)

செய்யாறு தொகுதியில் கால்நடை தீவனப் பற்றாக்குறை.

*1136 திரு வ. அன்பழகன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செய்யாறு தொகுதியில் கால்நடை தீவனப் பற்றாக்குறையை போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

செய்யாறு தொகுதியில் கால்நடைகளுக்குத் தீவனப் பற்றாக்குறை உள்ளதாக அரசுக்குச் செய்தி ஏதும் வரவில்லை. இருப்பினும் தேவைப்படும் இடங்களுக்கு வைக்கோல் வழங்குவதற்காக வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 500 மெட்ரிக் டன் வைக்கோல் வாங்கி, விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்யாறு தொகுதி போன்ற பின் தங்கிய பகுதிகளிலே, வறட்சி நிலவுகிற பகுதிகளிலே வைக்கோல் மட்டுமல்லாமல், பொதுவாகக் கால்நடைத் தீவனங்களை மானிய விலையில் வழங்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்யாறு தொகுதியில் கால்நடைகளுக்குத் தீவனப் பற்றாக்குறை இருப்பதாக அரசுக்குச் செய்தி ஏதும் வரவில்லை. இருப்பினும் கடந்த வறட்சிக் காலத்தில் தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக 500 மெட்ரிக் டன் வைக்கோலை வாங்கி, தமிழகம் முழுவதும், தேவைப்பட்ட இடங்களில் கொள்முதல் விலைக்கு சிறு, குறு மற்றும் விவசாயக் கூலிகளுக்கு அது வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமீபத்திலே மதுரையில் போடி மற்றும் அதைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலே ஏற்பட்ட இனக் கலவரம் குறித்தும், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் விவாதிப்பதற்காக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அது குறித்து நாங்கள் விவாதிக்க, தங்களிடம் அனுமதி கோருகிறோம்.

திரு. குமரி அனந்தன்: கனம் சபாநாயகர் அவர்களே, மதுரை மாவட்டம், போடியிலே நடைபெற்றக் கலவரம் பற்றியும், சென்னையிலே வழக்கறிஞர் ஒருவர் போலீசால் தாக்கப்பட்டது குறித்தும் 2 ஒத்திவைப்புத் தீர்மானங்களை நான் கொடுத்திருந்தேன். அதற்கு அனுமதியில்லை என்று தாங்கள் நேற்று எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறீர்கள். அதற்குக் காரணம் சொல்லப்படவில்லை. எழுத்து மூலம் காரணம் சொல்லப்படவில்லை என்பதை சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அது பற்றித் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போடியில் ஏற்பட்ட கலவரம் குறித்து வந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. எனினும் நமது சட்டமன்ற விதி 66-ன் படி—அந்தக் கலவரம் குறித்து ஏற்கெனவே நீதி விசாரணை நடத்துவதற்காக ஒரு நீதிபதி அமர்த்தப்பட்டு, அது நீதி விசாரணைக்கு உட்பட்டிருந்தால்—அதை அவையிலே விவாதிக்க முடியாது என்பதால், அந்த விசாரணைக் குழு தொடர்பான வினாக்களை மட்டும் உறுப்பினர்கள் எழுப்பி, அதற்குச் சட்டத் துறை அமைச்சரவர்கள் பதிலளிக்க வேண்டுகிறேன்.